**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No: 89/2013 தேதி:08.01.2025**

**வா.சா. 1 – நாகையா**

**<u>குறுக்கு விசாரணை :</u>** ( 10, 11 பிரதிவாதிகள் தரப்பில்)

என் அம்மா என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். வழக்கு சொத்துக்கள் எங்களுடைய சொத்துக்கள் என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த அசல் வழக்கானது அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.195/2012 என்ற வழக்கில் பிறபிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை இல்லாநிலையது என விளம்புகை கோரி முதன்மை பரிகாரமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வேறு நீதிமன்றத்தில் பிறபிக்கப்பட்ட தீர்ப்பை இந்த நீதிமன்றத்தில் செல்லாது என்று கேட்க சட்டத்தில் வழிவகை இல்லை என்பதால் என் வழக்கு செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி நாங்கள் ரத்து செய்ய கோரியுள்ள அசல் வழக்கு எண்.195/2012 ல் தரப்பாளர்கள் யார் என்ற விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியாக உள்ள அழகர்சாமி என்பர் முன்வழக்கிலும் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். முன்வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகள் இந்த வழக்கின் 1ம் வாதி மற்றும் 4, 5, 6 வாதிகள் என்றால் சரிதான். முன்வழக்கில் நான் பிரதிவாதி இல்லை என்றால் சரிதான். முன்வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகள் எந்த வகையில் சேர்க்கப்பட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. முன்வழக்கு தாக்கல் செய்தபோது என் அண்ணன் நடராஜன் இறந்துபோனார் என்றால் சரிதான். நடராஜனின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தான் முன்வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் அது தவறு. முன்வழக்கில் என்னையும் 3 வாதியையும் தரப்பினராக சேர்த்திருக்கவேண்டும் என்பதும் அவ்வாறு சேர்க்காததால் முன்வழக்கு நடவடிக்கையை ரத்து செய்யவேண்டும் என்பதும் ஏற்புடையது அல்ல எனவும், எங்கள் இருவரையும் தரப்பினராக சேர்க்கவேண்டும் என்ற அவசியம் இல்லை என்றால் சரியல்ல. முன்வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகள் ஆஜராகமால் தோன்றாதரப்பினராகியுள்ளார்கள் என்றால் அவர்களுக்கு அழைப்பாணை வரவில்லை.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2, வா.சா.ஆ 3 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் முன்வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகள் ஆஜராகமால் தோன்றாதரப்பினராகியுள்ளார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னையும், என் தம்பி முனியசாமியும் முன்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நாங்கள் அரசு பணியில் இருந்ததால் வழக்கு நடவடிக்கை எடுக்கவில்லை. நான் ஒரு அரசு பணியாளராக இருந்தும், மேற்படி முன்வழக்கு நடவடிக்கை அனைத்தும் தெரிந்திருந்தும் இன்று வரை எனது தரப்பில் தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் அதற்காக இந்த வழக்கு தாக்கல்செய்துள்ளோம். முன்வழக்கில் சமரச நடவடிக்கையில் அழகர்சாமி மோசடி செய்துவிட்டதாக எவ்வாறு சொல்கிறேன் என்று நிரூபிக்க ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. முன்வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகள் சார்பாக வழக்கு நடவடிக்கையை 1ம் பிரதிவாதியான அழகர்சாமியே மேற்கொள்வதற்கு எந்த ஒரு அதிகார ஆவணமும் வழங்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை. முன்வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராகியுள்ள நிலையில் முன்வழக்கில் 1ம் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகளை மோசடி செய்துவிட்டார் என்று சொல்லுவது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. முன்வழக்கில் எந்த இடத்திலும் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்காக சமாதானமாக போனார் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. முன்வழக்கில் 1ம் பிரதிவாதி மட்டும் சமாதானமாக போனார் என்று இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து சமாதானமாக போனார் என்று குற்றசாட்டு சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அனைவரின் சார்பாகவும் சமாதானம் செய்துள்ளார் என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கும் அழகர்சாமி குடும்பத்திற்கும் பூர்வீகமாக எங்கள் அம்மா வழியாக பாத்தியப்பட்டது. என் அம்மாவின் பெற்றோர் பெயர் காமாட்சிநாயுடு, சின்னதாய்ம்மாள் ஆவார்கள். இவ்வழக்கு சொத்துக்கள் காமாட்சிநாயுடு, சின்னதாய்ம்மாள் பெயரில் எந்த காலத்திலும் இருந்ததாக ஆவணம் இல்லை என்றால் சரிதான். என்னுடைய தாயாரும் அழகர்சாமியின் தாயாரும் உடன்பிறந்தவர்கள் இல்லை என்றால் உடன்பிறந்தவர்கள் கிடையாது. சித்தப்பா பெரியப்பா பிள்ளைகள் ஆவார்கள். என் அம்மா உடன் பிறந்தவர்கள் ஸ்ரீரங்கம்மாள்,

ரங்கம்மாள், நாகம்மாள் மற்றும் என் தாயார் கஸ்தூரியம்மாள் ஆவார்கள். அழகர்சாமியின் தந்தையுடன் பிறந்த சகோதரர் முத்துகிருஷ்ணன் என்றால் சரிதான். முத்துகிருஷ்ணன் எனது பெரியம்மா நாகம்மாளை திருமணம் முடித்தார் என்றால் சரிதான். என் தந்தை பெயர் முத்துகிருஷ்ணன் என்றால் சரிதான். என் தந்தை முத்துகிருஷ்ணனுக்கு பூர்வீகம் வழக்கு சொத்துக்கள் உள்ள முடுக்கன்குளம் கிராமம் கிடையாது வத்தலகுண்டு கிராமம் தான் என்றால் 1950 ஆண்டிலேயே முடுக்கன்குளத்திற்கு வந்துவிட்டார். என் தந்தை முடுக்கன்குளம் கிராமத்தில் குடியிருந்தார் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. இந்த வழக்கில் என் முகவரியில் கதவு எண் சொல்லவில்லை என்றால் சரிதான். முடுக்கன்குளம் கிராமம் எங்களுக்கு பூர்வீகம் கிடையாது என்றும் அங்கு குடியிருப்பு கிடையாது என்பதால் தான் கதவு எண் சொல்லவில்லை என்றால் சரியல்ல. முடுக்கன்குளம் கிராமத்தை சேர்ந்த கஸ்தூரிஅம்மாள் வத்தலகுண்டுக்கு திருமணமாகி சென்ற பிறகு வத்தலகுண்டில் தான் குடியிருந்து நாங்கள் அங்கு தான் பூர்வீகம் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணத்தில் கஸ்தூரியம்மாளுக்கோ அல்லது எனக்கோ முடுக்கன்குளம் கிராமத்தில் முகவரி இருப்பதை நிரூபிக்கும் வகையில் ஆவணம் தாக்கல்செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. என் பெரியம்மா நாகம்மாளுக்கும் முத்துகிருஷ்ணனுக்கும் குழந்தைகள் இல்லை அந்தவகையில் வாரிசுகள் இல்லாமல் இறந்துபோனார்கள் என்றால் சரிதான். அந்த வகையில் முத்துகிருஷ்ணன் வகையில் 1ம் பிரதிவாதியும், நாகம்மாள் வகையில் என் அம்மாவும் வாரிசுகளாக உரிமைகோருகிறோம் என்றால் சரிதான். முத்துகிருஷ்ணனின் உடன்பிறந்தவர்கள் தான் சட்டப்படியான வாரிசுகள் எனவும், நாகம்மாளின் உடன்பிறந்தவர்கள் வாரிசாக வரமாட்டார்கள் என்றால் சரியல்ல. நாகம்மாளின் உடன்பிறந்தவர்களின் கஸ்தூரியம்மாளை தவிர மற்ற சகோதரிகள் உரிமை கோரவில்லை என்றால் அவர்கள் சிறுவயதில் இறந்துவிட்டார்கள். முத்துகிருஷ்ணன், நாகம்மாள் தம்பதிக்கு நாங்கள் ஒரு சட்டப்படியான வாரிசுகள் என்று ஆவணங்களோ, நீதிமன்ற தீர்ப்போ இல்லை என்றால் ஞாபகம் இல்லை. அவ்வாறு ஆவணம் இல்லை என்பதால் தான் அதை ஒப்புக்கொண்டால் வழக்கு பாதமாகிவிடும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் முத்துகிருஷ்ணன் நாகம்மாளின் வாரிசு என உரிமை கோரிகிறோம் என்றால் கூட்டு

குடும்பமாக தான் இருந்தோம். வழக்கு சொத்துக்களில் என் அப்பா முத்துகிருஷ்ணன் மற்றும் நாகம்மாளின் கணவர் முத்துகிருஷ்ணன் கூட்டாக அனுபவித்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்று ஞாபகம் இல்லை. எந்த காலத்திலும் வழக்கு சொத்துக்களை நாங்களோ அழகர்சாமி குடும்பத்தார்களோ கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றும் அதற்கான ஆவணங்கள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்கள் 28.05.1985 தேதிய ஆவணத்தின் மூலமாக தான் நாங்கள் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4 ல் பாகபிரிவினை பத்திரத்தில் என் பெற்றோரோ 2 , 3 வாதிகளோ தரப்பினர் இல்லை என்றால் சமபக்த சகோதரர்கள் அடங்கிய பாகபிரிவினை என்று எழுதியுள்ளதாலும் நடராஜன் பெயர் உள்ளதாலும் எங்களுக்கு உரிமை உள்ளது. வா.சா.ஆ 4 ல் முத்துகிருஷ்ணன், நாகம்மாளின் இரண்டாம் பங்காளிகளான நாங்கள் என்று சொல்லியுள்ளதால் சட்டப்படியாக நாங்கள் வாரிசாக முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் வழக்கு சொத்துக்கள் மேற்படி முத்துகிருஷ்ணன் மற்றும் நாகம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள காரணத்தினால் சொல்லவில்லை. அவ்வாறு தாக்கல் செய்திருந்தால் வழக்கு சொத்துக்களில் எங்களுக்கு உரிமை இல்லை என்று ஆரம்ப நிலையிலேயே தெரிந்துவிடும் என்பதால் அந்த சங்கதிகளை திட்டமிட்டு மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நடக்கும் விவரம் நடராஜனின் வாரிசுகளுக்கு தெரியுமா என்றால் தெரியும். நடராஜனின் வாரிசுகள் இந்த நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வருவார்கள். 2012 வழக்கிற்கு முன்பே 1991ல் வேலுசாமி வகையறா மற்றொரு வழக்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வெற்றி பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தரப்பினர்களாக அழகர்சாமி மற்றும் நடராஜன் வகையறாக்கள் இருந்தார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் அழகர்சாமி மட்டும் மேல்முறையீடு செய்தார் என்றும் நடராஜன் வகையறாக்கள் மேல்முறையிடு செய்யவில்லை என்றால் சரியல்ல. நடராஜன் தரப்பினர்கள் மேல்முறையீட்டிற்கு சென்றார்கள். நடராஜன் தரப்பினருக்கு உரிமை இல்லாததால் தான் மேல்முறையீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 8ல் மேற்படி மேல்முறையீட்டில் என் அண்ணன் நடராஜன் எதிர்மனுதாராக தான் உள்ளார் என்றால் சரிதான்.அதில் அழகர்சாமி தான் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நடராஜன் தாக்கல் செய்துள்ள சங்கதிகள் மற்றும் சாட்சிகள் அனைத்தும் கஸ்தூரிஅம்மாள் வகையறாக்களை கட்டுப்படுத்தும் என்றால் சரிதான். மேற்படி வழக்கும் இதே வழக்கு சொத்துக்களுக்கு நடந்தது என்றால் சரிதான். முன்வழக்கில் எந்த இடத்திலும் நடராஜன் உரிமை கோரவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல. நடராஜன் உரிமை கோரியுள்ளார். OS No:218/91ல் வழக்கில் என் அண்ணன் நடராஜன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் அந்த வழக்கில் அவர் அளித்த சாட்சியங்களை இந்த வழக்கில் ஆவணங்களாக குறியீடு செய்வதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு நடவடிக்கையில் எனது அண்ணன் நடராஜன் வழக்கு சொத்துக்கள் 1ம் பிரதிவாதி அழகர்சாமிக்கு பாத்தியமான சொத்துக்கள் என்று சொல்லி எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், நீதிமன்றத்தில் சாட்சியமும் அளித்துள்ளார் என்றும் அந்த விவரங்களை திட்டமிட்டு மறைத்து இந்த வழக்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. சார்பு நீதிமன்ற தீர்ப்பானது அழகர்சாமிக்கு சாதகமாக மாறியபோது அதன் மீது 2வது மேல்முறையீடு வேலுசாமி செய்தார் என்றால் சரிதான். அந்த 2வது மேல்முறையீட்டில் ஒரே பிரச்சனைக்கு பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்து நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதை ஏற்க முடியாது என்று குறிப்பிட்டு தான் அதற்கு முன்பே தாக்கல் செய்த மற்றொரு வழக்கில் பரிகாரம் கேட்டுகொள்ள அறிவுறுத்தி 2ம் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மாமியார் சொத்தை மருமகன் எவ்வாறு பெறமுடியும் என்று சொல்லி தள்ளுபடி செய்தது. நான் மாமியார் என்று சொல்லுவது என் தாய் வழி பாட்டியான சின்னதாய்ம்மாள் எனவும், மருமகன் என்று சொல்லுவது நாகம்மாளின் கணவர் முத்துகிருஷ்ணன் என்று சொல்கிறேன். முதலாவது மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பு அடிப்படையில் வழக்கு தாவா சொத்துக்கள் நடராஜனுக்கு வந்தது என்று சொல்கிறேன். அழகர்சாமி தரப்பில் தாக்கல்செய்யப்பட்ட மேல்முறையீட்டு நடவடிக்கைகளை மேல்முறையீட்டுக்கு செல்லாத நடராஜன் தனக்கு சாதகமாக பயன்படுத்த இயலாது என்றால் சரியல்ல.

நடராஜன் எந்த காலத்திலும் வழக்கு சொத்துக்கள் அவருக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு போடவில்லை என்றால் ஞாபகம் இல்லை. எந்த எந்த சங்கதிகள் எனக்கு பாதகமாக உள்ளதோ அவைகளை சாட்சியத்தில் ஞாபகம் இல்லை என்று தப்பித்து கொள்கிறேன் என்றால் சரியல்ல. முன்வழக்கு நடவடிக்கையின்போது வழக்கு சொத்துக்களை பார்வையிட நீதிமன்ற ஆணையர் வந்தபோது வேலுசாமி வகையறாவினர் என் அண்ணன் நடராஜனை அடித்துவிட்டதாக குற்றம் சாட்டி நீதிமன்றத்தில் ஒரு தனிநபர் புகார் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். மேற்படி குற்ற புகாரில் என் அண்ணன் வழக்கு சொத்துக்களை 1ம் பிரதிவாதி அழகர்சாமியின் சொத்துக்கள் என்று குறிப்பிட்டே வழக்கு நடவடிக்கை எடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நடராஜன் உயிருடன் இருந்த காலத்தில் வழக்கு சொத்துக்களில் தனக்கு உரிமை உள்ளது என்று எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் இறப்பிற்கு பின்னர் சட்டப்படியான உரிமை மூலம் இல்லாத ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் ஏற்படுத்தி கொண்ட பாகபிரிவினை பத்திரத்திற்கு பிறகு தான் அனைத்து வழக்குகளும் ஏற்பட்டுள்ளது எனவும் மேற்படி வழக்குகளில் நடராஜன் பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரியல்ல. 13.02.1952 ல் வழக்கு சொத்துக்களை பொறுத்து எனது பாட்டி சின்னதாய்ம்மாள் வேலுசாமியின் தந்தை முத்துதேவர் என்பவருக்கு திருச்சுழி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 185/1952 என்ற கிரையம் ஆவணம் ஏற்படுத்தியுள்ளது எனக்கு தெரியும். நான் ரத்து செய்யகோரும் ஆவணங்கள் சம்மந்தமாக பல ஆண்டுகள் காலதாமதமாக பரிகாரம் கோரியுள்ளதால் காலதாமத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நடராஜன் உயிருடன் இருந்த வரை தாவா சொத்துக்கள் அழகர்சாமி வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்று சொல்லிவிட்டு தற்போது எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லுவது முறையற்றது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 4 பாகபத்திரம் எந்தவிதமான உரிமைமூலம் இல்லாமல் அழகர்சாமி, நடராஜன் ஆகியோர்கள் ஏற்படுத்தி கொண்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் இராமநாதபுரம் மாவட்டம், காரியாபட்டி கிளை என்று ஆவணத்தின் அடிப்படையில்

சொல்லியுள்ளேன் சரிதான். எந்தவிதமான உரிமைமூலம் இல்லாமலும், வழக்குமூலம் இல்லாமலும் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால் வழக்கின் பரிகாரங்கள் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. முன்வழக்கில் ஏற்பட்டுள்ள தீர்ப்பை ரத்து செய்ய தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் எனவும் இந்த நீதிமன்றத்தில் பரிகாரங்கள் கோர முடியாது என்றால் சரியல்ல. முதல் பரிகாரமே கிடைக்கதக்கது அல்ல என்பதால் இதர பரிகாரங்கள் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** (21, 22 பிரதிவாதிகள் தரப்பில்)

இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.